SC.No.131/2024
Date: 19.06.2024.
A1, A9, A10, A11, A12, A13, A14, A15, A16, A17 absent. Sec.317 Cr.P.C petition filed and allowed. A5, A18 - Died. Other accused present.

**10, 13 மற்றும் 15 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

அ.சா.1 முதல் 4 சாட்சிகள் பிறந்த ஊர் என்ற விபரங்கள் எனது புலனாய்வில் துலாங்காது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் உள்ளிட்ட ஆவவணங்களில் அவர்கள் பணிபுரிந்த இடம் மதுரை ஆயுதப்படையில் பணிபுரிந்தனர். அ.சா.1 முதல் 4 சாட்சிகள் முன்னதாக திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் பணிபுரிந்தார்களா அவர்களுக்கு இந்த பகுதி பரிசட்யமானது என்ற விபரங்கள் எனது புலனாய்வில் துலங்காது. சம்பவ இடம் அம்பாசமுத்திரம் - தென்காசி மெயின்ரோட்டில் கீழ ஆம்பூர் கடனாநதி ஆற்றுப்பாலத்திற்கு வடபுறம் என அ.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடம் புகார்தாரருக்கு சம்பவம் நடப்பதற்கு முன்னதாகவே தெரிந்த இடம் என்பது எனது ஆய்வில் துலங்காது. அ.சா.1க்கு புகார் கொடுப்பதற்கு முன்பாக எவ்வாறு தெரிந்து கொண்டார். யார் சொல்லி தெரிந்து கொண்டார் என்ற விபரங்கள் எனக்கு எனது புலன் விசாரணையில் துலங்குமா என்றால் அவருக்கு அருகில் இருந்தவர்கள் கூறி தெரிந்து கொண்டதாக தெரிவித்துள்ளார். எந்த ஆவணத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் புகார்தாரரின் வாக்குமூலத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் யாரிடமிருந்து தெரிந்து கொண்டார் என்பது துலங்காது. நான் கூறுவது தவறு என்றும், புகார்தாரர் வாக்குமூலத்தில் அவ்வாறு எதுவும் கூறப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1ஐ நான் விசாரித்தபோது அவருக்கு அந்த இடம் மற்றும் அதன் பெயர் விபரங்களை எவ்வாறு தெரிந்து கொண்டீர்கள் என்று நான் குறிப்பாக கேள்வி எழுப்பி பதிலாக பெற்றுக்கொள்ளவில்லை. யாரோ ஒருவர் கூறிய தகவலின் அடிப்படையில் அவர் சம்பவ இடம் பற்றி புகாரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அந்த நபர் யார் என நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. புகார்தாரருக்கு

அவ்வாறு இடம் பற்றி தெரிவித்த நபர் யார் என்பதை நான் விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் சாட்சிகள் அம்பிகாபதி, சங்கரபெருமாள் ஆகியோர்களிடமிருந்து தெரிந்துகொண்டுள்ளார். மேற்படி இருவரையும் நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். அவர்கள் பட்டியல் சாட்சி 22, 23 ஆவர். அவர்கள் இருவரும் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் அ.சா.1 க்கு நிகழ்விடத்தின் அடையாளம் மற்றும் பெயர் விபரங்களை அவர்கள் தெரிவித்ததாக குறிப்பிட்டு கூறவில்லை. மேற்படி இருவரும் தெரிவித்த தகவல் பற்றி விபரங்கள் எனது வழக்கு நாட்குறிப்பில் குறிக்கப்பட்டுள்ளது. அது பகுதி-1ல் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 6 நபர்கள் பற்றி கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய நபர்கள் என்பதற்கும், இனம் தெரியாத நபர்கள் என்பதற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். எதன் அடிப்படையில் அவர்களை பார்த்தால் அடையாளம் காட்டமுடியும் என்பது குறித்து மேற்கண்ட சாட்சிகள் அடையாளம் காட்டக்கூடிய நபர்களின் உயரம், நிறம், உடை, உருவதோற்றம், முக அமைப்பு ஆகியவற்றை கொண்டு அடையாளம் காட்டமுடியும் என்று கூறியுள்ளார்களா என்றால் அவ்வாறு குறிப்பாக கூறவில்லை. பார்த்தால் அடையாளம் காட்டமுடியும் என்றுதான் கூறியுள்ளார்கள். சந்தேக நபர்களை பின்புறமாக நிற்க வைத்து அதன் மூலமும் அடையாள அணிவகுப்பு நடத்தி அடையாளம் காணவேண்டும் என்று நான் குறிப்பாக வேண்டுகோள் எதுவும் நடத்தவில்லை. அடையாளம் அணிவகுப்பு நடத்தப்படும் முன்பு சந்தேக நபர்கள் என கூறப்படும் புகாரில் குறிப்பிட்டுள்ள 6 நபர்கள் பற்றி விபரங்கள் அவர்களின் அடையாளங்கள் பற்றி ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியுள்ளார்கள். வேறு ஆவணங்கள் எதுவும் இல்லை. கண்கண்ட சாட்சிகள் எவரும் குறிப்பிட்டு அடையாளம் எதுவும் கூறவில்லை. அதைபோலவே புகாரில் குறிப்பிட்டுள்ள 6 நபர்களின் பெயர்களையும் அடையாள அணிவகுப்பிற்கு முன்பு கூறவில்லை. அடையாள அணிவகுப்பிற்கு பின்னர் புகாரில் குறிப்பிட்டுள்ள 6 நபர்களின் பெயர் விபரம் பற்றி சாட்சிகளுக்கு நான் கூறினேன். புகாரில் குறிப்பிட்ட 6 நபர்கள்தான்

அடையாளம் காட்டினார்கள் நான் குறிப்பிட்டு கூறவில்லை. கண்ணுற்ற சாட்சிகள் எவரும் வழக்கில் எதிரியாக குறிப்பிட்டுள்ள நபர்கள் பெயர்களை வாக்குமூலங்களில் குறிப்பிட்டு கூறவில்லை. கண்ணுற்ற சாட்சிகளுக்கு எதிரிகளின் பெயர் விபரத்தை நான் கூறினேன். அடையாள அணிவகுப்பிற்கு பின்னர் கூறினேன். அடையாள அணிவகுப்பிற்கு பின்னர் அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்ட சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அதில் அவர்கள் எதிரிகளின் பெயர், விபரங்களை கூறவில்லை. அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்த பின்னர்தான் எதிரிகளின் பெயர் விபரங்களை கூறினேன். அடையாள அணிவகுப்பிற்கு பின்னர் நான் கூறிய பெயர் உள்ள நபர்கள் நடந்ததாக கூறப்படும் சம்பவத்தில் ஈடுபட்டதாக அவர்களுக்கு தெரியும். அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்படவேண்டிய நபர்களை அணிவகுப்பிற்கு முன்பாக நான் புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை. எனது வழக்கு நாட்குறிப்பில் எதிரிகளின் புகைப்படம் எதுவும் இல்லை. (நாட்குறிப்பு பரிசீலிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டது). அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்ட சந்தேக நபர்கள் முதல் முறையாக நீதிமன்றத்திற்கு காவல் அடைப்பிற்கு எடுத்து செல்லும்போது அவர்கள் முகத்தை மறைத்து சென்றோமா என்ற விபரம் வழக்கு நாட்குறிப்பில் துலங்காது. 13 மற்றும் 15 எதிரிகள் முதலில் காவல் அடைப்பிற்கு உட்பட்டுத்தப்பட்ட பின்னர் எத்தனை முறை நீட்டிப்பிற்காக நீதிமன்றத்திற்கு எடுத்துசெல்லப்பட்டுள்ளார்கள் என்ற விபரம் ஞாபகமில்லை. மேற்படி நபர்களை நீதிமன்றத்திற்கு எடுத்து செல்லும்போது அடையாளம் காட்டவேண்டிய சாட்சிகளை நீதிமன்றத்தில் வைத்து மேற்படி 13, 15 எதிரிகளை அடையாளம் காட்டப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஏன் என்றால் முதல் முறையாக நீட்டிப்பிற்கு முனனதாகவே அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டுள்ளது. அடையாள அணிவகுப்பு நடத்தி புகாரில் குறிப்பிட்டுள்ள ஓடி சென்ற 6 நபர்கள் குரல் மாதிரிகளை பதிவு செய்யவில்லை. ஏன் என்றால் ஒப்பீடுவதற்கு மற்றொரு குரல் மாதிரி இல்லை. சம்பவ இடத்தில் கண்ணுற்ற சாட்சிகள் கேட்ட குறிப்பிட்ட வார்த்தைகள் எந்த நபரால் கூறப்பட்டிருக்க கூடும் என்பதற்காக அவர்களுடைய குரல் மாதிரிகள் பதிவு செய்யப்பட்டதா என்றால்

இல்லை. துரத்தி சென்ற நபர்களை நோக்கி வெடிகுண்டை வீசிய 2 நபர்கள் துரத்தி சென்றவர்களை நோக்கி திரும்பி வெடிகுண்டை வீசியுள்ளார்கள். கண்ணுற்ற சாட்சிகள் வாக்குமூலத்திலிருந்து கூறப்பட்டுள்ளது. அவர்கள் எனது விசாரணையில் வெடிகுண்டை வீசிய நபர்களின் தோற்றம், உயரம், உருவம், நிறம் பற்றிய விபரங்களை குறிப்பிட்டு கூறவில்லை. அவ்வாறு விசாரித்து வாக்குமூலத்தில் குறிப்பிடுவது அவசியம் என்றால் அவர்கள் பார்த்தால் அடையாளம் காட்டமுடியும் என்று கூறியதால் பதிவு செய்யவில்லை. சம்பவ இடத்திலிருந்து ஓடிய 6 நபர்கள் என்ன உடை அணிந்திருந்தார்கள் என்று நான் கேட்டு பதிவு செய்யவில்லை. இறந்தவர் உடலில் இருந்த 6 வெட்டுகாயங்கள் மட்டுமே புகாரில் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வெட்டுப்பட்ட பகுதி பற்றி மட்டும்தான் கூறப்பட்டுள்ளது. பிரேத விசாரணை அறிக்கையில் மேற்கண்ட பகுதிகளை தவிர வேறு சில பகுதிகளிலும் காயங்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் முதுகின் இடதுபக்கம் வெட்டுக்காயம் ஏற்பட்டதாக கூறப்படவில்லை. இடதுபக்க இடதுபின்பக்க தோளில் சிறிய வெட்டிகாயம் என்பதும், வலது பக்க தொடையில் கீழலிருந்து கணுக்கால் வரை சிதைந்த காயம் இருப்பதாகவும் கூறப்படவில்லை. வலது கை ஆள்காட்டிவிரல், நடுவிரல் மற்றும் மோதிர விரல் ஆகிய இடங்களில் வெட்டுக்காயங்களால் அவை தொங்கிய நிலையில் இருந்தது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வலது கை ஆள்காட்டிவிரல், நடுவிரல் மற்றும் மோதிர விரலில் ஏற்பட்ட காயங்கள் எவ்வாறு ஏற்பட்டிருக்க கூடும் என்று பிரேத பரிசோதனைக்கு பின்னர் நான் மருத்துவரிடம் குறிப்பாக கேட்கவில்லை. அந்த காயம் பற்றி விபரங்கள் பிரேத பரிசோதனை அறிக்கையில் உள்ளது. வலது கை ஆள்காட்டிவிரல், நடுவிரல் மற்றும் மோதிர விரல் ஆகியவற்றில் காணப்பட்ட காயங்கள் தற்காப்பின்போது ஏற்பட்ட காயங்களா என்றும் நான் கேட்கவில்லை. முதல் தகவல் அறிக்கைக்கு பின்னர் பிரேத பரிசோதனை அறிக்கையில் பார்வையிட்டதில் இரண்டிற்கும் காயங்களின் எண்ணிக்கையில் வேறுபாடு உள்ளதா என்றால் அது பற்றி புகாரில் எதுவும் இல்லை. தொடை, தோளின்பின்பக்கம், முதுகின்

இடதுபக்கம், இடதுபின்பக்க தோள், வலது தொடை ஆகிய காயங்கள் எவ்வாறு ஏற்பட்டிருக்க கூடும் என்று கண்ணுற்ற சாட்சிகள் 08.01.2010 தேதிய கூடுதல் வாக்குமூலத்தில் கூறியுள்ளார்கள். 07.01.2010 அன்று புகார்தாரர் மேற்படி காயங்களை கூறவில்லை. 07.01.2010 ம் தேதியன்று விசாரிக்கப்பட்ட சாட்சிகள் இறந்துபோன வெற்றிவேல் எதனால் கொலை செய்யப்பட்டிருக்கக்கூடும் என்று எனது விசாரணையில் கூறவில்லை. 08.01.2010 ம் தேதியன்று அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டபோது வெற்றிவேல் எதனால் கொலை செய்யப்பட்டார் என்று தெரிந்து கொண்டு வாக்குமூலத்தில் கூறியுள்ளார்கள். அதற்கான காரணத்தை எவ்வாறு தெரிந்து கொண்டார்கள் என்று நான் அவர்களை விசாரித்தபோது கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் பிரேத விசாரணை மூலம் தெரிந்து கொண்டுள்ளார்கள். அவர்களுக்கு யார் அவ்வாறு தகவல் தெரிவித்தார்கள் என்று நான் விசாரிக்கவில்லை. அவர்களாகவே தெரிந்து கொண்டுள்ளார்கள். பிரேத விசாரணை நாளன்று கண்ணுற்ற சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். பிரேத விசாரணை அறிக்கையில் பத்தி 9 மற்றும் 15 ல் கூறப்பட்டுள்ள சங்கதிகள் கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் எழுதப்பட்டதா என்றால் அவர்கள் கூறியதிலிருந்தும் மற்றவர்கள் கூறியதிலிருந்தும் எழுதப்பட்டது. பிரேத விசாரணை சாட்சிகளுக்கு அவர்களை சாட்சியாக ஏற்கும்படி அழைப்பாணை சார்பு செய்யப்பட்டதா என்றால் அலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதால் தனியாக எழுத்து மூலமாக சார்பு செய்யவில்லை. நான் கூறுவது தவறு என்றும், அது வழககிற்காக கூறப்படும் பொய் என்றும் சொன்னால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கையில் காலம் எண்.15 ல் உதவி ஆய்வாளர் சிவசுப்பிரமணியன் மற்றும் அவரது மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடு உள்ளது என துவங்கி அவர்களது குடும்ப விபரங்கள் கூறப்பட்டுள்ளது. இந்த விபரங்கள் யாருடைய தகவலின்பேரில் கூறப்பட்டுள்ளது என்றால் கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் இறந்தவர் சகோதரர் கோபலசாமி ஆகியோர் கூறிய தகவலின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தகவல் பிரேத விசாரணைக்கு முன்பாகவே சிவசுப்பிரமணியன் உதவி

ஆய்வாளரை விசாரித்தலிருந்து தெரியவந்தது. பிரேத விசாரணையின்போது உதவி ஆயவாளர் சிவசுப்பிரமணியன் விசாரிக்கப்படவில்லை, பிரேத பரிசோதனைக்கு முன்பாகவே விசாரிக்கப்பட்டுள்ளார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரிக்கப்படுவதற்கு முன்பு சம்பவ இடம் மற்றும் அதன் சுற்றுபுறங்கள் யாருடைய இடங்கள் என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள சக்திவேல், பால்பிள்ளை ஆகியோர் பெயர் பற்றி விபரங்களை எந்த சாட்சியின் மூலம் தெரியவந்தது என்றால் அதன் அருகில் இருந்தவர்களை விசாரித்ததிலிருந்து தெரியவந்தது. அவர்களின் பெயர், விபரம் நான் குறிப்பிடவில்லை. பார்வை மகஜர் குறிப்பிட்ட சாட்சிகளை தவிர மற்றவர்களின் வாக்குமூலம் எதையும் பதிவு செய்யவில்லை. பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள சாட்சிகள் சக்திவேல், பால்பிள்ளை ஆகியோர் நிலங்கள் என்று குறிப்பிட்டு என்னிடம் கூறவில்லை. கடனாநதி செல்லும் மண்பாதையில் நாட்டு வெடிகுண்டு காணப்பட்ட இடம் கருப்பசாமி பாண்டியன் தென்னத்தோப்பிற்கு தெற்கே என கூறப்பட்டுள்ளது- அந்த கருப்பசாமி பாண்டியன் பெயர் விபரம் யாருடைய விசாரணையின் மூலம் தெரியவந்தது என்றால் அருகில் இருந்தவர்களை வைத்து விசாரித்து தெரிந்து கொண்டேன். அவர்கள் பெயர் விபரத்தை நான் குறிப்பிடவில்லை. அவர்களின் வாக்குமூலத்தையும் பதிவு செய்யவில்லை. பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள 2 நபர்களை தவிர வெடிகுண்டு காணப்பட்ட இடத்தில் வைத்து வேறு எவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லுவதற்கு முன்பாகவே பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள 2 சாட்சிகளும் அங்கு இல்லை. நான் சம்பவ இடம் சென்ற பின்னர் பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள 2 சாட்சிகளையும் விசாரணை செய்து அதன் பின்னர் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம் தயாரிக்கும் வரை அவர்களது வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. சம்பவ இடத்தில் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அதன்பின்னர் மகஜர், அத்தாட்சி, வரைபடம் தயாரிக்கவேண்டும் என்பது நடைமுறை என்றால் அது சரியல்ல. சம்பவ நடந்த

இடத்தில் காணப்படும் அரிவாள் மற்றும் பைப் வெடிகுண்டு ஆகியவற்றில் கைரேகை பதிவுகள் உள்ளதா என்று நான் கண்டறிய நடவடிக்கை எடுத்தேனா என்றால் விரல் ரேகை பதிவு நிபுணர் உடனடியாக சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டார். அவர் பார்வையிட்டு மேற்கண்ட பொருட்களில் பதிவுகள் இருப்பதாக எதுவும் கூறாமல் வேறு இடத்திற்கு கைரேகை பதிவுகளை ஆய்வு செய்ய சென்றுவிட்டார். கைரேகை நிபுணர் அந்த இரண்டு பொருட்களையும் பார்த்தாரா என்றால் பார்த்தார். அவர் ரேகை பதிவுகள் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். கைரேகை நிபுணர் மேற்கண்ட பொருட்களை பார்வையிட்டார் என்பது வழக்கு ஆவணங்களில் துலங்காது. கைரேகை நிபுணரின் அறிக்கையை நான் பார்வையிட்டேன். அந்த அறிக்கையில் மேற்கண்ட 2 பொருட்களையும் அவர் பரிசீலனை செய்ததாக இருக்கிறதா என்றால் இல்லை. 15 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கடைசியில் "என்னை அடிச்சிடாதீங்க நான் உண்மை எல்லாம் சொல்லிவிட்டேன்" என்று உள்ளது என்றால் சரிதான். 12.02.2010 ல் கண்ணுற்ற சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. 07.01.2010 அன்று விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலத்தின்படி இறந்துபோன வெற்றிவேல் மீது நாட்டு வெடிகுண்டு வீசியது நபரை யார் என்று விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்து துலங்குமா என்றால் துலங்காது. ஆனால் அடையாளம் காட்ட முடியும் என்று கூறியுள்ளார். அவ்வாறு அடையாளம் காட்ட முடியும் என்று புகாரில் கூறப்பட்டுள்ளது. நாட்டு வெடிகுண்டை வீசிய நபர்களை அடையாளம் காட்ட முடியும் என குறிப்பாக கூறப்படவில்லை. கண்ணுற்ற சாட்சிகள் எனது விசாரணையின்போது பைக்கிலிருந்து கீழே விழுந்த வெற்றிவேல் குப்பற விழுந்ததாக அப்போது கழுத்து தலை, முதுகு ஆகிய பகுதிகளில் வெட்டி காயப்படுத்தப்பட்டார் என்று கூறவில்லை என்றால் குப்பற என்ற வாசகம் மட்டும் இல்லை. வலதுபுறம் சரிந்தார் என்று வாசகம் உள்ளது. வெட்டுபடும்போது வெற்றிவேல் கையை துக்கி வெட்டை தடுத்ததாக அதனால் கைவிரல் துண்டானதாக சாட்சிகள் குறிப்பிட்டு கூறவில்லை. வெற்றிவேலை சுரேஷ், ராதாகிருஷ்ணன் என்ற பெயருடைய நபர்கள் வெட்டினார்கள் என்று கண்ணுற்ற

சாட்சிகள் எவரும் பெயர் குறிப்பிட்டு கூறவில்லை. மாரியப்பன், சுரேஷ், ராதாகிருஷ்ணன் ஆகிய எதிரிகளை திரேக பரிசோதனை செய்தோமா என்றால் சுரேஷ், ராதாகிருஷ்ணனை திரேக பரிசோதனை செய்தோம். மேற்படி இருவரையும் திரேக பரிசோதனை செய்வதற்கு முன்னர் என்னையும், என்னுடன் வந்த காவலர்களையும் திரேக பரிசோதனை செய்ய மேற்கண்ட இரு எதிரிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கினேனா என்றால் அதுபோன்ற நடைமுறை எதையும் பின்பற்றவில்லை. காவல் வாகனத்தை சோதனை செய்ய அனுமதித்தோமா என்றால் அவர்கள் இருவரும் காவல்நிலையத்தில் வைத்து சோதனை செய்யப்பட்டதால் அவ்வாறு அனுமதிக்கவில்லை. 13 வது எதிரி சுரேஷின் சட்டை அளவு கணக்கீடப்பட்டதா என்றால் தனியாக அளக்கவில்லை, சட்டையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்ததால் தனியாக அளக்கவில்லை. 13 வது எதிரி சுரேஷின் சட்டை அளவு கைப்பற்றப்பட்ட சட்டையில் காணப்படும் அளவுடன் ஒத்தது அல்ல என்றும், அந்த அளவுடைய சட்டையை அவர் அணிந்திருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த சட்டையில் காணப்படும் இரத்தக்கறை எவ்வளவு அளவில் விரவி இருந்தது என்று குறிப்பிடவில்லை. அந்த சட்டையில் சினேகா டெய்லர் என்று அடையாளம் காணப்பட்டதா என்றால் இல்லை. அந்த சட்டையை கைப்பற்றும்போது காவல்நிலைய எண்.569(1) ன் கீழ் அதனை கைப்பற்றும்போது கைப்பற்றப்படும் பகுதியை சேர்ந்த 2 சாட்சிகளை அழைத்து சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டேனா என்றால் அந்த பகுதியில் ஆட்கள் இல்லை என்பதால் அந்த பகுதியை சேர்ந்தவர்களை அழைக்கவில்லை. என்னுடன் வந்திருந்த நபர்கள் சாட்சியாக இருப்பதாலும், அந்த பகுதியில் தனிநபர் எவரும் இல்லை என்பதாலும் என்னுடன் வந்த நபர்கள் அத்தாட்சியில் கையொப்பமிட்டார்கள் என்று என்னுடைய ஆவணங்களில் துலங்காது. சம்பவ நடந்த இடத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் ஓடிய 2 நபர்கள் விட்டு சென்ற இருசக்கர வாகனத்தில் கைரேகை பதிவுகள் உள்ளதா என்று ரேகை நிபுணரால் ஆய்வு செய்யப்பட்டது. கைப்பற்றப்பட்ட இருசக்கர

வாகனத்தில் உள்ள கைரேகை பதிவுகள் குறித்த அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் கைரேகை நிபுணர் நான் நேரடியாக அனுப்பவதாக கூறினார். எதிரிகளின் ரேகை பதிவு செய்யப்படுவதற்கு முன்பு இருசக்கர வாகனத்தில் இருந்த பதிவுகள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதை உறுதி செய்து கொண்டேனா என்றால் நான் அவ்வாறு உறுதி செய்து கொள்ளவில்லை. சுரேஷ் மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோர்களிடமிருந்து விரல் ரேகை பதிவுகள் பெறுவதற்கு தனியே நீதிமன்றத்தின் அனுமதி பெறவில்லை. நீதிமன்ற அனுமதி இல்லாமல் எதிரிகளின் கைரேகை பெற எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் காணப்படும் இருசக்கர வாகனத்திலிருந்து பதிவு செய்யப்பட்டதாக கூறப்படும் ரேகை பதிவுகள் பொய்யானது என்றால் சரியல்ல. அதுபோன்ற பதிவு எதுவும் இருசக்கர வாகனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் மாரியப்பன், சுரேஷ் மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோர்களின் அலைபேசி அழைப்பு பட்டியலை பெற்று பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அவர்களின் அலைபேசி இருப்பிட டவர் குறிப்புகளையும் பெற்றேனா என்றால் பெற்று பார்வையிட்டேன். அவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன். மேற்கண்ட நபர்களின் பெயர்கள் அந்த அலைபேசி எண்ணில் குறிப்பிடப்படவில்லை. அந்த எண் வேறு நபர்கள் பெயரில் பதிவாகியுள்ளது. விட்டுசென்ற இருசக்கர வாகனத்திலிருந்து எந்த பகுதியிலிருந்து கைரேகை பதிவுகள் எடுக்கப்பட்டது என்று எனது விசாரணையில் அவை துலங்குமா என்றால் துலங்காது. இரண்டு இருசக்கர வாகனங்களிலும் காணப்பட்டதாக சொல்லக்கூடிய விரல் ரேகை பதிவுகள் விரலின் எந்த பகுதியை சார்ந்தது என்று என்னால் கூற இயலாது. பொதுவாக இருசக்கர வாகனத்தை துவக்க முற்படும்போது அந்த வாகனத்தில் கைப்பிடி பகுதியில் பிடித்து இருக்கும் விரல்கள் கீழ்நோக்கியப்படி அமைந்திருக்கும் என்றால் ஏதேனும் ஒரு கையில் அவ்வாறு அமைந்திருக்கும்.

எதிரிகளின் கீழ்நோக்கிய படி ரேகை வழங்கும்படி நான் கேட்டு பெறவில்லை. வெற்றிவேல் காயம்பட்டதாக கூறப்படும் நேரத்தில் பத்திரிக்கையாளர்கள், புகைப்பட நிபுணர்கள், மாவட்ட ஆட்சியர் காருக்கு பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். அந்த காரில் பயணித்தவர்கள் அரசு செய்தி தொடர்பு துறையை சேர்ந்தவர்களும் உண்டு என்றால் சரிதான். வெற்றிவேல் காயம்பட்ட இடத்திற்கு காரில் வந்த செயதியாளர்களும், புகைப்படகாரர்களும் வந்தார்கள். அவர்கள் வீடியோ எடுத்தார்கள். புகைப்படம் எடுத்தார்களா என்றால் எடுக்கவில்லை. அந்த வீடியோவை கைப்பற்றினேன். வேறு வீடியோக்களை கைப்பற்றவில்லை. வேறு யாரும் புகைப்படம் எடுத்ததாகவோ, வீடியோ எடுத்ததாகவோ வேறு யாரும் கூறவில்லை. அதனால் கைப்பற்றவில்லை. காயம்பட்ட இடத்தில் டயர் தடம் எதுவும் இருந்ததாக என்றால் இரத்த உறைவு காணப்பட்டது. இந்த விபரம் வழக்கு நாட்குறிப்பில் குறிப்பாக காணப்படவில்லை. பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் டயர் தடங்கள் எதுவும் கூறப்படவில்லை. சம்பவ இடத்தில் காணப்பட்டதாக கூறப்படும் அரிவாள்களில் இரத்தக்கறை எதுவும்இல்லாமல் அங்கு இருப்பதாக சம்பவ இடத்தை பற்றி புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களில் பதிவாகியுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட அரிவாள்கள் இரத்தக்கறையுடன்தான் கைப்பற்றப்பட்டது. அரிவாள்களில் இரத்த உறைவு விரவி இருந்த பகுதியை குறிப்பிட்டு கூறவில்லை. அரிவாள்களில் இரத்தம் எந்த பகுதியை நோக்கி விரவி இருந்தது என்றும் குறிப்பிட்டு கூறவில்லை. வெற்றிவேல் காயம்பட்டு கிடந்த இடத்திற்கும், அரிவாள்கள் கைப்பற்றப்பட்ட இடத்திற்கும் இடையே இரத்தம் திவலைகள் படிந்த அமைப்பு ஒரு நட்சத்திர வால்போல் காணப்பட்டடதா என்றால் அவ்வாறு காணப்படவில்லை. இரத்தக்குளம் போல்விரவி இருந்தது. காயம்பட்ட இடத்தில் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் 3 அரிவாள்களை விட்டுசென்றதாக புகாரில் கூறப்பட்டுள்ளது. சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் அவ்வாறு ஈடுபட்டதாக குறிப்பிட்ட

வாசகம் இல்லை. புகாரை பதிவு செய்யும் நாளில் 3 அரிவாள்களை விட்டுசென்ற நபர்கள் யார் என்று தெரியாது என்றால் சரியல்ல.

**(10, 13 மற்றும் 15 எதிரிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது)**

Sd/-B.Rajavel,
Principal District Judge,
Tenkasi